www.tamilarangam.net



# புலிகளின் கடல்வழி விநியோக நுட்பங்கள்! கட்டுரைத் தொடர் - 15

தாமரை காருண்யன்



ஈழம் தோல்வி கண்டதா?
தோற்கடிக்கப்பட்டதா?

கடந்த அங்கத்தில் விடுதலைப்புலிகள் அமைப்பின் மரபுப் போர்த்தகமை வளர்ந்த சூழலின் பின்னணியினைப் பற்றிப் பேசத் தொடங்கியிருந்தோம்.

யாழ்ப்பாணத்தை இழந்து புலிகள் வன்னிப்பகுதிக்குப் பின்வாங்கியிருந்த காலத்திலேயே புலிகளின் மரபுப்போர்த்தகைமை வளர்ச்சியடையத் தொடங்கியது.

இவ் வளர்ச்சியினைப் பற்றிப் பேசத் தொடங்கிய கடந்த அங்கம், விடுதலைப்புலிகள் அமைப்பின் கப்பல் வழிப் பயணம் மூலம் தென்கிழக்காசிய நாடொன்றுக்கு விடுதலைப்புலிகள் அமைப்பின் நிதிப் பொறுப்பாளர் தமிழேந்தி வந்து சேர்ந்த இடத்தோடு முடிவுக்கு வந்திருந்தது.

தமிழேந்தி தென்கிழக்காசிய நாடொன்றில் அப்போது விடுதலைப்புலிகள் அமைப்பின் சர்வதேசக் கட்டமைப்பக்குப் பொறுப்பாக இருந்த கேபியினைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறார்.

அப்போது கே.பியின் பொறுப்பில்தான் விநியோகப்பணி இருந்தது. களத்தில் தேவைப்படும் பொருட்களின் பட்டியல் விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனால் நேரடியாகவே கேபிக்கு அனுப்பி வைக்கப்படும். இப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து - அவற்றை உரியமுறையில் களத்திற்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வது கே.பியின் பணி.

களத்தில் தேவைப்படும் பொருட்களின் விபரங்களைத் தளபதிகளும் பொறுப்பாளர்களும் தலைவர் பிரபாகரனுக்குத் தெரியப்படுத்துவார்கள். இதனை ஆய்வு செய்தும், தனது திட்டங்களுக்கமைய தேவைப்படும் பொருட்கள், கருவிகளை உள்ளடக்கியும் தேவைப்படும் பொருட்களின் பட்டியலை பிரபாகரன் நேரடியாகவே முடிவு செய்வார்.

இப் பட்டியலைத் தீர்மானிப்பதில் களநிலைமை முக்கிய பாத்திரம் வகிக்கும். அப்போதய சூழலில் சிறிலங்காப் படையினரின் ஜெயசுக்குறு நடவடிக்கையை எதிர் கொள்ளவேண்டிய தேவை இருந்தது. சிறிலங்கா அரசின் ஒரு பெரும் மரபுசார் படையணியை எதிர்கொள்வதற்குத் தேவையான இராணுவக் கட்டமைப்பை வளர்த்தெடுப்பதற்கான அவசியம் எழுந்தது.

அந்தத் தேவை விடுதலைப்புலிகள் தமது மரபுசார் போர்த்தகமையினை வளர்த்துக் கொள்ள வேண்டிய புறச்சூழலை ஏற்படுத்தியது.

புதியமுறைகளும் புத்தாக்கங்களும் உலகில் உருவாகுவதற்கு தேவைகளே அடிப்படையாக உள்ளன (Necessity is the mother of invention and innovation) என்ற ஒரு கோட்பாடு உண்டு. இத்துறையில் ஆய்வுகளை மேற்கொள்வோர் இக் கோட்பாட்டை முழுமையாக ஏற்றுக்கொள்ளாவிடினும் இக் கோட்பாடு இன்றும் கவனத்தை ஈர்ப்பதாகவே உள்ளது.

இக் கோட்பாட்டின் அடிப்படையில் நோக்கும்போது விடுதலைப்புலிகள் அமைப்பு தன்னை புதிய முறையில் ஒழுங்கமைத்துக் கொள்வதற்கான அழுத்தத்தை போர்ச்சூழல் உருவாக்கிய தேவை வழங்கியிருந்தது.

தரையில் மரபுசார் போர்த்தகமையினை வளர்த்துக் கொள்வதற்கு ஆர்டிலறி – மோட்டார் படையணி, டாங்கிப் படையணி, விமான எதிர்ப்புப் படையணிகளின் வளர்ச்சி தேவையானதாக இருக்கும்.

இந் நிலையில் ஒரு பலமான ஆர்டிலறி – மோட்டார் படையணியை வளர்த்தெடுக்கப் பிரபாகரன் முடிவெடுக்கிறார். இதற்குத் தேவையான படைக்கலங்களை இராணுவத்திடமிருந்து கைப்பற்றுவதனையும் வெளியில் இருந்து கடல்வழி மூலம் கொண்டு வந்து சேர்ப்பதனையும் உத்தியாக வகுத்துக் கொள்கிறார்.

டாங்கிப் படையணியினை வளர்த்தெடுப்பதானால் டாங்கிகளை சிறிலங்காப் படைகளிடம் இருந்த கைப்பற்றியாக வேண்டும். வெளியில் இருந்து கடல் வழியாகக் கொண்டு வருதல் நடைமுறைச் சாத்தியம் குறைந்தது. இதனால் டாங்கிப் படையணியினை அமைப்பதற்கு முதற்படியாக ஒரு பலம் வாய்ந்த டாங்கி எதிர்ப்புப் படையணியினை அமைப்பதற்கான திட்டங்களை பிரபாகரன் தமது தளபதிகளுடன் ஆலோசனை செய்து வளர்த்துக் கொள்கிறார்.

விமான எதிர்ப்புப் படையணியினைப் பொறுத்தவகையில் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் விருப்பத்துக்குரியவையாக இருந்த போதிலும் இதனைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான பொருளாதார வளப் பற்றாக்குறையால் விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது.

கடலில், கடற்புலிகள் அணியினை வலுப்படுத்தும் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. விமானப் படையணியொன்றினை உருவாக்கும் முயற்சிகளிலும் கவனம் செலுத்தப்படுகின்றன.

இவ்விடத்தில் ஒரு விடயத்தினைக் குறிப்பிட்டுக் கட்டுரையினைத் தொடர்தல் பொருத்தம் எனத் தோன்றுகிறது.

## புதினங்கள்

மலையக அரசியல் வரலாற்று வளர்ச்சியும் முன்நகர்த்த வேண்டிய பணிகளும்
பல வகுப்பறைகள் மரங்களுக்குக் கீழே நடக்கின்றன
ஊரான ஊரிழந்தோம்! ஒற்றைப் பனைத் தோப்பிழந்தோம்!!
வன்குரலுக்கு எதிரான கலகக் குரல்
தலைவர் பிரபாகரன் வீரச்சாவு குறித்து தொடரும் சர்ச்சை: காரணங்கள் எவை? கட்டுரைத் தொடர் - 17
நக்கீரனுக்கு ஏன் இந்தக் கோடாலிக் காம்பு வேலை?
முள்ளிவாய்க்கால் படுகொலையின் தத்துவப் பின்னணி
கிழக்கில் கிடந்த பச்சைச் சூரியன்!
தேசியத் தலைவருக்கு விளக்கு வைக்கத் துடிக்கும் மார்க் அன்ரனிகள்

## செய்திகள்

முகாம்களுக்கு செல்லவிடாது தடுப்பது விடயங்களை ஒளித்து மறைக்க விரும்புபவர்களின் செயல்! கூட்டமைப்பு அறிக்கை
உள்விவகாரங்களில் தலையிட வேண்டாம்' - பான் கீ மூனுக்கு சிறிலங்கா கோரிக்கை!
விடுதலைப் புலிகளால் அச்சுறுத்தலாம்! - அதனால் தடை என்கிறது இந்தியா!
'எங்களது வாகனங்கள் எங்கே?' - கிளிநொச்சியில் தமது வாகனங்களைத் தேடும் மக்கள் கேள்வி!
இனப்பிரச்சினைக்கான தீர்வு கிட்டிவிடும் என எதிர்பார்த்த மக்கள் ஏமாற்றத்திற்கு உள்ளாகியுள்ளனர்: செல்வம் அடைக்கலநாதன்
சிறிலங்காவுக்கும், இந்தியாவுக்கும் இடையிலான விவகாரங்கள்: பசில் ராஜபக்சவே கையாள்வார்!
நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வுகளை பொதுமக்கள் பார்வையிட முடியாது!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இக் கட்டுரைத் தொடர் தனது பேசுபொருளுக்குத் தேவைப்படுகின்ற, உதவுக்கூடிய பல்வேறு விடயங்களை உள்ளடக்கி வளர்ந்து சென்று கொண்டிருக்கிறது.

இவ்வாறு வெளிப்படுத்தப்படும் நிகழ்வுகளில் வரும் கதை மாந்தர்கள் அந்தந்தக் காலகட்டத்தில் வகித்த பாத்திரங்கள் அந்தந்தக் காலகட்டத்து நிலைமைகளுக்குள் வைத்தே மதிப்பீடு செய்யப்படுகின்றன.

வரலாற்றில் ஒரு கால கட்டத்தில் முற்போக்குப் பாத்திரங்கள் வகித்தவர்கள் வேறாரு காலத்தில் பிற்போக்குப் பாத்திரங்கள் வகிப்பதும், முன்னர் பிற்போக்குப் பாத்திரம் வகித்த பின்னர் முற்போக்குப் பாத்திரம் வகிப்பதும் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திலும் நாம் இதற்கு உதாரணங்களைக் காணமுடியும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இந்திய இலங்கை ஒப்பந்தக் காலத்தையும், பின்னர் இந்திய இராணுவ – விடுதலைப்புலிகள் யுத்தம் இடம்பெற்ற காலகட்டத்து வரலாற்றையும் மாத்தையா வகித்த முக்கியமான பாத்திரத்தை தவிர்த்தோ ஒதுக்கியோ எழுத முடியாது.

இதேபோலத்தான் ஜெயசுக்குறுச் சமரில் விடுதலைப்புலிகளின் படையணிகளின் முதன்மைக் கட்டளைத் தளபதியாக கருணா வகித்த முதன்மைப் பாத்திரத்தைத் தவிர்த்து விட்டு ஜெயசுக்குறுக் காலகட்டத்து வரலாற்றை எழுத முடியாது.

கருணாவின் தற்போதய பாத்திரத்தை இக்கட்டுரைத்தொடர் நிராகரிக்கிறது. அதற்காக ஜெயசுக்குறு காலத்தில் கருணா வகித்த பாத்திரத்தினை இக் கட்டுரை நிராகரிக்க மாட்டாது. அதனை அக் காலகட்டத்து நிலைமைகளுக்கள் வைத்துத்தான் இக் கட்டுரை மதிப்பீடு செய்யும்.

தமிழேந்தி தென்கிழக்காசியப் பகுதிகளுக்குப் போய்ச் சேர்ந்த காலகட்டத்திற்கு சற்றுப் பின்பு கருணா தளபதிகளுடனும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகளுடனும் வன்னிப்பகுதியைச் வந்தடைகிறார். விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனையும் ஏனைய தளபதிகளையும் சந்திக்கிறார்.

ஜெயசிக்குறுவினை எதிர்கொள்வது தொடர்பான மூலோபாயங்கள் வகுக்கப்படுகின்றன.

தமிழேந்தியை நீண்டநேரம் காக்க வைத்து விட்டமையால் இவ்விடத்திலிருந்து அவரிடம் போகிறோம். ஜெயசிக்குறுவினைக் களத்தில் எதிர்கொள்வதற்கான ஏற்பாடுகள் தொடர்பான விடயங்களை அடுத்த அங்கத்துக்கு விட்டு விடுகிறோம்.

தென்கிழக்காசிய நாடொன்றில் தன்னைச் சந்திப்பதற்காகக் காத்திருந்த தமிழேந்தியினை கே.பி சந்திக்கின்றார். இருவரும் களநிலைமைகள் குறித்து விரிவாகப் பேசிக் கொள்கின்றனர்.

அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு எத்தகைய பொருட்களும் கருவிகளும் தேவைப்படும் என்பது கே.பிக்கு தெரிந்திருந்தது. இவை தொடர்பான செய்திகளைப் பிரபாகரன் ஏற்கனவே கே.பிக்கு அறிவித்திருந்தார். இவை தவிர மேலும் விரிவான பட்டியல்கள் வரவிருக்கின்றன என்பதனையும் கே.பி அறிந்திருந்தார்.

இவை ஆர்ட்டிலறி உட்பட்ட ஆயுதங்களாகவும் ஏனைய பொருட்களாகவும் இருக்கப்போகின்றன.

ஆயுத தளபாடங்கள் இல்லாத ஏனைய பொருட்களை தரமானதாகவும் அதே நேரம் நியாயமான விலையிலும் பொதுச்சந்தையில் கொள்வனவு செய்யதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுவது வழமை.

ஆயுத தளபாடங்கள் கொள்வனவு செய்வது என்பதும் அதனை கொண்டு வந்து சேர்ப்பது என்பதும் ஒருவிதமான கலை.

அவற்றைப் பொதுச் சந்தையில் பெற முடியாது. நாடுகள் எதுவும் விடுதலைப்புலிகள் அமைப்புக்கு ஆயுத தளபாடங்கள் உதவியாகக் கொடுக்கும் நிலை இருக்கவில்லை.

எதனையும் பணத்தால்தான் பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கான பணத்தைத் திரட்டி எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஆயுத முகவர்களுக்குப் பணம் கொடுத்தால் மட்டும் போதாது. ஏதோ ஒரு நாட்டின் பாவனைக்காகவே இவ் ஆயுதங்கள் பயன்படுத்தப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்தும் பத்திரங்களும் வழங்கப்பட்டாக வேண்டும்.

ஆயுத தளபாடங்களை பரிசீலனை செய்ய வேண்டும். கொள்வனவு செய்யப்படும் தளபாடங்களை குறிப்பிட்ட இடத்தைத் தீர்மானித்து ஆயுத முகவர்களிடம் இருந்து பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

பரிசீலனைக்காகக் காண்பிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டவற்றை வழங்காது தரம் குறைந்தவற்றை அல்லது வேறு ஏதாவற்றை வழங்கக்கூடிய ஏமாற்றுக்காரர்களிடம் இருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும்.

தம்மை ஆயுத முகவர்களாக உருமறைப்புச் செய்து ஆயுதங்களை விற்பவர்களாக நடிக்கும் அரசுகளின் உளவுத்துறைகளிடம் சிக்குப்படாமல் இருக்க வேண்டும்.

ஆயுத தளபாடங்களையும் ஏனைய பொருட்களையும் கப்பல்களில் ஏற்றி – அவற்றைத் தேவைப்படின் இடம் மாற்றி – தேவையேற்படின் கடலிலேயே அவற்றைப் பாதுகாத்து வைத்து – நாடுகளின் கடற்படைகளின்; கண்காணிப்பில் இருந்து உச்சியவாறு கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும்.

இவை இலகுவான பணிகள் அல்ல. ஒன்றுக்கொன்று தொடர்புபட்ட ஆனால் ஒன்றோடு ஒன்று கலக்காத வகையில் ஒழுங்கமைக்கப்படவேண்டியவை.

ஆயுத தளபாடங்களை வெளியில் இருந்து பெற்றுக் கொள்ளும் முயற்சியில் விடுதலைப்புலிகள் இயக்கமும் புளொட் இயக்கமும்தான் ஆரம்பத்தில் இருந்து ஈடுபட முயன்றன.

1980களின் நடுப்பகுதியல் புளொட் இயக்கத்தின் முயற்சியின் அடிப்படையில் தமிழகத்தின் சென்னைத் துறைமுகத்துக்கு கொள்கலன் மூலம் அனுப்பப்பட்ட ஆயுதச் சிப்பம் ஒன்று அதிகாரிகளிடம் மாட்டிக் கொள்கிறது.

இதன் பின்னர் புளொட் அமைப்புக்குள் எற்பட்ட உள்முரண்பாடுகளால் அமைப்பு நிலைகுலையத் தொடங்க இம் முயற்சிகளும் நின்று போகின்றன.

விடுதலைப்புலிகள் அமைப்பு மட்டும் முயற்சியினைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

விடுதலைப்புலிகள் அமைப்பிலும் வெவ்வேறு பேர் இம் முயற்சிகளில் ஈடுபட்ட போதும் இத்ததைய ஒரு வலைப்பின்னலை ஏற்படுத்தி விநியோகங்களை மேற்கொள்வதில் வெற்றியடைந்தவர் கே.பி மட்டுமே.

ஆரம்பத்தில் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து இம் முயற்சியில் ஈடுபட்டு வெற்றிபெற முடியாது போனவர்களில், பின்னர் விடுதலைப்புலிகளின் விமானப்படையணிக்கு பொறுப்பாக இருந்த சங்கரும் ஒருவர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்படியாக விடுதலைப்புலிகள் அமைப்பின் விநியோகப் பொறிமுறை பெரிதும் கே.பியில் தங்கியிருந்த ஓர் சூழலில்தான் தமிழேந்தி கே.பியைச் சந்திக்கிறார்.

தேவைப்படும் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு நிதிப்பற்றாக்குறை பெரிதும் இருந்த நேரம் அது. வெளிநாடுகளில் சேகரிக்கப்படும் நிதியின் அளவும் குறைவாக இருந்த காலகட்டம் அது.

1993-1994 ஆம் ஆண்டுகளில் குலுக்கல் முறையில் மீளளிக்கப்படும் வகையில் ஒவ்வொரு குடும்பத்திடம் இருந்து இரண்டு பவுண் அல்லது 10,000 ருபாய் என ஏறத்தாழ 100 கோடி வரையிலான பணத்தினை விடுதலைப்புலிகள் திரட்டியிருந்தனர்.

இந் நிதியிலிருந்து ஒரு கணிசமான தொகையினை தாயகத்தில் இருந்து உண்டியல் மூலம் அனுப்பியே தேவையான விநியோகங்கள் செய்யப்பட்டுக் கொண்டிருந்தன.

தாயகத்தில் இதற்கென ஒதுக்கிய நிதியும் பயன்படுத்தப்பட்டு முடிவடைந்த ஒரு சூழல்.

பொருட்களைப் பெறுவதாயின் அதற்குப் பணம் திரட்டியாக வேண்டும். தமிழேந்தி அதற்குரிய திட்டத்தைக் கே.பியிடம் முன்வைக்கிறார்.

முன்னர் போல் பொருட்களுக்கான பணம் ஊரில் இருந்து தருவது தற்போதய சூழலில் சாத்தியப்படாது. வெளியில் இருந்துதான் திரட்டியாக வேண்டும். வசதியுள்ளவர்களை அணுகி, அவர்களிடம் இருந்த முதலீட்டுத் தொகையினைப் பெற்று, வியாபார முயற்சிகளை ஆரம்பித்து அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் இருந்து கிடைக்கும் பணத்தின் ஊடாக பொருட்களை விநியோகிப்பது - இதுதான் தமிழேந்தி கே.பியிடம் முன்வைத்த திட்டம்.

இத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான பல்வேறு விடயங்களையும் கே.பிக்கு எடுத்துக் கூறுகிறார் தமிழேந்தி.

தமிழேந்தியின் திட்டவிபரிப்பைப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த கேபி, தமிழேந்தியின் விபரிப்பு முடிந்ததும் கூறுகிறார். 'இது வடலி வளர்த்துக் கள்ளுக் குடிக்கும் வேலை'.

தமிழேந்திக்கும் கேபிக்குமிடையே விவாதம் ஆரம்பிக்கிறது.

(அடுத்த வாரம் தொடரும்)

4/27/2010 4:09:50 PM

---

**உங்கள் கருத்துக்களை பதிவு செய்க:**

பெயர்

ஊர்

நாடு

மின்னஞ்சல்

கருத்து (max. 2000 characters)

அ Press F8 for English Powered by Quillpad

படத்தில் உள்ள எழுத்துக்களை பதிவு செய்க:

Change Image

Send Comment

**மேலும்**

- தலைவர் பிரபாகரன் வீரச்சாவு குறித்து தொடரும் சர்ச்சை: காரணங்கள் எவை? கட்டுரைத் தொடர் - 17
- போராளிகள் குறித்து தலைவர் பிரபாவின் கவலை - தொடர் - 16
- புலிகளின் மரபுப் போர்த் தகமை வளர்ந்தது எப்படி? கட்டுரைத்தொடர்- 14
- கிட்டுவை தமிழீழம் இழந்த கதை! கட்டுரைத் தொடர் - 13
- ராஜீவ் கொலைச் சம்பவம் ஏன் நிகழ்ந்தது? கட்டுரைத் தொடர் - 12
- சிறிலங்கா + தமிழீழம் = - இந்தியா: கட்டுரைத் தொடர் - பகுதி 11
- ஒஸ்லோ 'பிரகடனத்தை' புலிகள் ஏற்றார்களா? இல்லையா? பகுதி 10
- சிறிலங்கா - தமிழீழ முரண்பாட்டின் புவிசார் அரசியல் அடிப்படை- பகுதி 9
- இந்திய - தமிழீழ புவிசார் அரசியல் முரண்! ஈழம்: கட்டுரைத் தொடர் - 8
- தமிழீழத்தின் புவிசார் அரசியல் நிலை! - ஈழம்: கட்டுரைத் தொடர்- பகுதி 7

»மேலும் சுவடுகள்

தேடுங்கள் தேடு

www.ponguthamil.com

செய்திகள் | பேசும் படம் | சுவடுகள் | உங்கள் ஆக்கங்களையும் கருத்துக்களையும் அனுப்ப...
பார்வை | இனிது இனிது | அகப்பக்கம்
ஆயிரம் பூக்கள் | முகங்கள் / நிறங்கள் | தேடல்

© பொங்கு தமிழ் 2009 | விதிமுறைகளும் நிபந்தனைகளும் | info@ponguthamil.com |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்